1982 பிப்ரவரி 6]

[முற்பகல் 10-10.]

திரு. டி. மணி: நகராட்சி, ஊராட்சிகளில் ஏற்பாடு செய்திருக்கக்கூடிய குழுக்களின் யோசனைகளை காலாகாலத்தில் நிறைவேற்றுவதில்லை அல்லது அந்த யோசனைகள் எற்றுக்கொள்ளப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு அல்லது குறைபாடு இருக்கின்றது. குறிப்பாக குழித்துறை நகராட்சியில் ஒரு ஆண்டுக்கு முன்னால் அனுப்பப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாய் கடன் பெறக்கூடிய கோரிக்கை இன்னும் எந்தவிதமான முடிவும் பெறாமல் இருக்கிறது. ஆகவே அந்த முடிவுகளை துரிதமாக ஏற்றுக்கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: குழித்துறையைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திருப்பாலைக்குடியிலுள்ள பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்கும் திட்டம்.

*வினா எண். 76— திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆர். எஸ். மங்களம் யூனியன் திருப்பாலைக்குடியில் உள்ள பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக எடுத்து மாற்றியமைக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இந்தச் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

நடமாடும் மருத்துவக் குழு.

*வினா எண். 77—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட நடமாடும் மருத்துவக்குழு ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைந்து செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் முகவை மாவட்டத்தில் இந்த திட்டம் புகுத்தப்படாததற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) முகவை மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஏதுமில்லாததால் இத் திட்டத்தை புகுத்துவதற்கு இடமில்லை.